**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்</u>**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 26–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**<u>இ.ம.எண். 4/2023 இன் அ.வ.எண்.32/2009</u>**

**<u>CNR No. TNSA13-000021-2009</u>**

1. சித்ரா
2. கோபி (எ) கோபிநாத் . . . மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. வரதப்பன் (இறந்தவர்)
2. பாலமுருகன் . . . 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

3. கமலம்
4. பானுபிரியா . . . 3, 4 எதிர்மனுதாரர்கள்/இறந்த முதல் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 26.09.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P.முத்துசாமி அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P.அறிவழகன் அவர்கள் ஆஜராகியும், 4ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 4ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>**

மனுதாரர் இம்மனுவில் மனுதாரரும், அசல் வழக்கில் 1ம் வாதி என்றும், வழக்கானது எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், தாவா நடைமுறையில் உள்ளபோது கடந்த 17.09.2016ம் தேதி 1ம் பிரதிவாதி இறந்துவிட்டதாகவும், எனவே அவரது வாரிசுதாரர்களை மேற்படி தாவாவில் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டியது அவசியம் என்றும், இறந்துபோன 1ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி மகன் என்றும், 3ம் எதிர்மனுதாரர் கமலம் மனைவி என்றும், 4ம் எதிர்மனுதாரர் பானுப்பிரியா மகள் என்றும், மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதியின் மகன் பாலமுருகன் தரப்பினராக இருப்பதாகவும், எனவே 3, 4 எதிர்மனுதாரர்களை வழக்கில் 3, 4 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

2ம் எதிர்மனுதாரர் நேரிடையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை நிரூபிக்க வேண்டியது மனுதாரரின் கடமை என்றும், வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார்களே தவிர பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யவில்லை என்றும், 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட காரணத்தால் வாதிகள் 3, 4 எதிர்மனுதாரர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க மனு தாக்கல் செய்துள்ளது வழக்கை காலதாமதப்படுத்தும் எண்ணத்தில் என்றும், மேற்படி வழக்கானது 2009ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவாவில் சொல்லியுள்ள சொத்தானது கடந்த 2008ம் ஆண்டு இறந்து போன 1ம் பிரதிவாதி 2ம் எதிர்மனுதாரரின் தந்தை வரதப்பன் ஆவண எண்.775/2008 மூலம் தலைவாசல் சார்பதிவாளர் அலுவலகத்தில் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை பதிவு செய்து கொடுத்துள்ளதாகவும், எனவே இவ்வழக்கிற்கும் 3, 4 எதிர்மனுதாரர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும்,

எனவே இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. **<u>3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

3ம் எதிர்மனுதாரர் நேரிடையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை நிரூபிக்க வேண்டியது மனுதாரரின் கடமை என்றும், வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார்களே தவிர பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யவில்லை என்றும், 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட காரணத்தால் வாதிகள் 3ம் எதிர்மனுதாரரை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க மனு தாக்கல் செய்துள்ளது வழக்கை காலதாமதப்படுத்தும் எண்ணத்தில் என்றும், மேற்படி வழக்கானது 2009ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவாவில் சொல்லியுள்ள சொத்தானது கடந்த 2008ம் ஆண்டு இறந்து போன 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியான பாலமுருகன் என்பவருக்கு ஆவண எண்.775/2008 மூலம் தலைவாசல் சார்பதிவாளர் அலுவலகத்தில் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை பதிவு செய்து கொடுத்துள்ளதாகவும், எனவே இவ்வழக்கிற்கும், 3ம் எதிர்மனுதாரருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், எனவே இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

5. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. இவ்வழக்கில் இறந்து போன 1ம் பிரதிவாதி வரதப்பனின் வாரிசுகளை 3, 4 பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதியான வரதப்பன் என்பவர் கடந்த 17.09.2016ம் ஆண்டு இறந்துவிட்ட நிலையில் அவரது மனைவி மற்றும் மகளை இவ்வழக்கில் 3, 4 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேற்கொண்டு நடத்துவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மேற்கொண்டு வழக்கு தாக்கல் செய்யாமல் இருக்கவும், 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் இவ்வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் என்பதாலும் நீதியின் நலன் கருதி இம்மனுவானது கீழ்க்கண்ட நிபந்தனையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

7. தீர்வு:

இறுதியாக, இம்மனு நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள்/ வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ரூ.1000/–ம் செலவுத்தொகையாக 06.10.2025ம் தேதிக்குள் செலுத்தவேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 07.10.2025.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 26–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.09.26 18:32:26 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.09.26 18:32:37 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம. எண். 04/2023 இன்
அ.வ. எண். 32/2009
நாள் : 26.09.2025